
ஓம்
குஹப்ரஹ்மணே நம :

பஞ்சாமிர்த வண்ணம்
மற்றும்
சண்முக கவசம்

(பாராயணத்திற்குரியவை)



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

ஓம்

குஹப்ரஹ்மணே நம:

பஞ்சாமிர்த வண்ணம்

திருத்தேவையெனுந் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த

பாம்பன்

அத்தியாச்சிரம சுத்தாத்வைத

வைதிக சைவ சித்தாந்த ஞானபானு

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்தது.

சுபானு, ஐப்பசி
(2003)

[விலையற்றது; இலவசம்

பதிப்பு : அக்டோபர், 2003
(சுபானு, ஐப்பசி, கந்த சஷ்டி)

நூல் கிடைக்குமிடம்:


1. Dr. K. சுப்ரமணியம்,
எண் 46 (ப. எண் 36), ஹஸ்தினாபுரம் மெயின் ரோடு
நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044.

2. Dr. S. சுந்தரம்
எண் 76, (ப. எண் 84) முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு,
இராதா நகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044.

கணினி அச்சு வடிவம்:
ஸ்வஸ்திக் ஜெராக்ஸ்
35-A (ப.எண் 18-A), வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.

அச்சிட்டோர்:
கலர் வேர்ல்ட்
4/9, நான்காவது மெயின் ரோடு,
யுனைடட் இந்தியா காலனி
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முகப்பு அட்டை - இறை ஓவியம்:
நன்றி: கண்ணா போஸ்டர்ஸ்



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்
தம் சீடர்கட்கு அளித்துள்ள அருள்வாக்கு.

---

1. இறைவன் என்முன் வெளிப்பட்டு நின்று அருளிய உறுதியுரையும், உபகாரமும் பல. என் பாடல் அவனால் அங்கீகரிக்கப்பட்டது பிரசித்தம்.

2. என்னை ஆதரித்தருள் பரம ரகசிய சக்தி, என்னை நம்பினாரை ஆதரியாது நிற்குமோ? ஐயம் வேண்டாம்.

3. உங்களுக்கும் மற்றுள்ளபடி என்னை நம்பி நலமிழைத்-தார்க்கும் என் உள்ளும், புறமும் இருந்து என்னை ஆதரித்தருள் பரமன் யாவனோ, அவனது திருவருள் உயிர்த்துணையாய் நின்றருளுமாக. இது தப்பாது!

4. நீ மயங்க வேண்டாம். பரிவிற் பெரியாய்! நீ பாராயணம் செய்கின்ற மகாமகிமை உடைய சண்முகக் கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து, நற்கதியிற் சேர்க்குமே!

5. என்னைத் தள்ளினாலும், என்னை நம்பினவர்த் தள்ளேல் கனைத்தண்டை சிலம்பவரு கழுகுமலை முருகா!

6. அருணகிரிநாதனார் இதயாரவிந்தத் தேன் நுகர்ந்த தெய்வத் திருவருள் யாண்டும் எஞ்ஞான்றும் முன்நின்று அருள்க. ஓம்.

உ

ஓம் குமார ஜெயம்
பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள்
வாழ்க்கைக் குறிப்பிற் சில

1. ஸ்ரீமத் சுவாமிகள் அவதரித்த வருடம் திட்டவட்டமாய்த் தெரியவில்லை. கி.பி. 1850-1852க்குள் இக்காலம் உளதாகலாம் என்பர்.

2. கல்வி கி.பி.1866, திருமணம் கி.பி. 1878.

3. சுவாமிகள் பழநிக்கு யாத்திரையாகப் புறப்பட்ட ஞான்று "என் உத்தரவு பெறாது பழநிக்குப் புறப்பட்டனையோ" என, குமாரபிரான் அச்சுறுத்தியது - கி.பி. 1891.

4. சண்முக கவசம் பாடியது - கி.பி. 1891.

5. பஞ்சாமிர்த வண்ணம் பாடியது கர வருடம் கார்த்திகை மாதம் 24ம் தேதி செவ்வாய்க் கிழமை - கி.பி. 1891.

6. பிரப்பன் வலசையில் தவம் தொடங்கியது - கி.பி. 1894.

7. இறைக்காட்சி - கி.பி. 1894 (23.3.1894)

8. தவம் முடித்தது - கி.பி. 1894 (20.4.1894)

9. சென்னை வருகை - கி.பி. 1895, காசியில் கல்லாடை (காவி உடை) - கி.பி. 1902.

10. கால் முறிவு - சென்னை அரசினர் பொது மருத்துவ மனை, மன்றோ வார்டு படுக்கை எண் 11ல் அநுமதி. கி.பி. 1923 (27.12.1923).

11. மயூர வாகன சேவை - கி.பி. 1924 (7.1.1924)

12. உயில் சாசனப் பதிவு - கி.பி. 1926

13. உயில் அனுபந்த சாசனம் - கி.பி. 1927

14. பெங்களூர் பயணம் - கி.பி. 1928

15. செவ்வேட்பரமன் திருவடியில் (சென்னையில் நம்புலி அய்யர் தெரு, திரு. ஜகந்நாத முதலியார் இல்லத்தின் மேல்மாடியில்) சித்தாந்த அத்வைத முக்தி அடைந்தது கி.பி. 1929 (30.5.1929).

16. சென்னை, திருவான்மியூர் ஸ்ரீபால்வண்ண மருந்தீஸ்வரர் திருக்கோயில் வடபால் திருவளர் மயூரபுரத்தில் சமாதித் திருக்கோயில் கொண்டு அருளியது - 31.5.1929

சுக்கில வைகாசி சுத்தஅ விட்டமுறு
தக்க அமரபக்க சஷ்டிநாள் மிக்கோன்
குமரகுரு தாசகோ திலருட் கோமான்
அமலனடி யடைந்தார் ஆங்கு.

உ
ஓம் குமாரகுருப்யோ நம:
திருச்சிற்றம்பலம்.

பாண்டி நன்னாட்டில் பாம்பன் என்ற ஊரில் அவதரித்துச் செவ்வேள் கடவுட்கு 6666 பாமாலை புனைந்து அணிவித்த பெருந்துறவி, பாம்பன் ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் ஆவார். இப்பாடல்கள் ஆறு மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சுவாமிகள் மஹாதேஜோ மண்டல சபை என்ற அமைப்பை நிறுவியுள்ளார்கள். அவர்களே இப்பாடல்களுக்குப் பதிப்புரிமை பெற்றவர்கள்.

1923-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாளன்று சுவாமிகள் சென்னை தம்பு செட்டித் தெருவில் நடந்து செல்லும்பொழுது ஒரு குதிரை வண்டியால் தள்ளப்பட்டு, இடக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால், சென்னை அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு பெரிய மருத்துவர்கள், 73 வயதில் எலும்பு கூடுவது அரிது எனக்கூறிச் சிகிச்சை செய்யத் தொடங்கினர். (சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் ஸ்ரீ சுவாமிகள் சிகிச்சை பெற்ற படுக்கை அருகே இதனை அறிவிக்கும் கல்வெட்டு ஒன்று உள்ளது.) ஆயினும், எல்லாம் வல்ல முருகப்பெருமான் அருளால் சுவாமிகளின் படுக்கையின் பக்கல் (1924-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் நாள்) இரு தங்க மயில்களும், குழந்தை வடிவினனான குகப்பெருமானும் தோன்றி அருளவே* பதினைந்தே நாட்களில் எலும்பு கூடுவதாயிற்று !

[*அப்பொழுது திருவல்லிக்கேணி சுப்பிரமணியதாசர் என்ற சின்னசுவாமிப் பிள்ளை, சுவாமிக்காகத் தமது இல்லத்தில் நெடுநேரம் சண்முகக் கவச பாராயணம் செய்ய, அவர்க்கு ஒரு காட்சி கிடைத்தது. அதில், எலும்பு முறிந்த காலில் இறைவனின் இரண்டு வேல்களின் இலை போன்ற பகுதிகள் எலும்பு ஒன்றுமாறு பூட்டப்பட்டு, மூன்றாவது வேல் ஒன்று காலைத் தாங்கி நிற்பதையும் கண்டு பரவசப்பட்டார். இக்காட்சியின் வண்ணப்படத்தை சுவாமிகளின் சமாதி வளாகத் திருக்கோயிலில் (திருவான்மியூரில்) தரிசித்து மகிழலாம்.]

சுவாமிகள் வாழ்வில் மட்டுமல்ல. அக்காலத்தும், பிற்காலத்தும், சுவாமிகள் அருளிய நூல்களை உருக்கமாகப் பாராயணம் செய்பவர்க்கு எல்லா இன்னல்களும், நோய்களும் தீர்வது கண்கூடு. குறிப்பாக, **சண்முக கவசம், பஞ்சாமிர்த வண்ணம்** ஆகியவை, மிகச் சிறந்த பயனை, உடனேயும், நிச்சயமாகவும் அளிக்க வல்லவை. இது பற்றிய செய்திகள் பலவுண்டு. கணக்கற்றவர் பயன் பெற்றுள்ளனர்; பெற்று வருகின்றனர்.

திருச்செந்தூர் திருமுருகன் ஆலயத்தில் அணுக்கத் தொண்டராகப் பணிபுரிந்து வந்த அனந்த சுப்பையர் என்பவரும், வாட்கொடை கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய ஐயர் என்பவரும் பஞ்சாமிர்த வண்ணத்தைப் பாராயணம் செய்யும் எண்ணம் கொண்டு அவ்வூர்க் கவுண்டர் மண்டபத்தில் அவ்விதமே செய்யத் தொடங்கினர். அவ்வூரில் சிறந்த முருக பக்தையான முத்தம்மை என்ற பெயருடைய மூதாட்டியும் அங்கு உடனிருந்து, அதனைச் செவிமடுத்தனர்.

அவ்வமயம் ஒருநாள் சுமார் இருபது வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் ஆங்குத் தோன்றி, மறைவில் நின்று, பாடல்களைக் கேட்பதை அம்மையார் கண்டார்கள். அந்த இளைஞர், கையில் காசிச் செம்பு ஒன்று கொண்டிருந்தார்.

"இவர் யார்? புதியவராக இருக்கிறாரே? எப்படி-யாயினும் இவர் இங்கு அருகில் அமர்ந்து கேட்கலாமே? மறைவில் நிற்பது ஏன்?" என அம்மையார் நினைத்த அளவில் அவர் மறைந்தனர்! இதனை அவ்வம்மையார் மற்ற இருவருக்கும் தெரிவித்தபின், அவர்கள் மூவரும் செந்திலாண்டவனை வழிபட்டு இல்லம் திரும்பினர்.

அன்றைய மறுநாள் இரவு, அம்மையார் கனவில், அவர் முதல்நாள் மாலை கண்ட இளைஞர் காசிச் செம்புடன் தோன்றினார். "அம்மையே! நேற்று நீ என்னைப் புதியவன் என்று எண்ணினாய் அல்லவா? யானும் இவ்வூரே! என்னைத் தொடர்ந்து வந்தால் இருப்பிடம் காட்டுவேன்!" என்றும் கூறினார். கனவில் அம்மையார் அவரோடு தெருவுக்கு வந்தனர். அங்கு நின்ற இளம் பருவப் பெண் ஒருத்தியுடன் அவர் செல்வதைக் கண்டு, இவரும் பின் சென்றார். அவர்கள் கல்யாண மண்டபத்தில் நின்றனர். பின், அவர் அம்மையாரை நோக்கி, "அம்மையே! கவுண்டர் மண்டபத்தில் பாராயணம் செய்யப்படும் பஞ்சாமிர்த வண்ணம் இயன்றவரை, இனிய ஓசையுடன் செய்யப்படவேண்டும். அதனால் நான் மகிழ்வுறுகிறேன். அது எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் பாராயணம் செய்யப்படுமோ அங்கெல்லாம் யான் வருவேன்; இருப்பேன். எனவேதான், அங்கே வந்தேன். எனது இருப்பிடம் இக்கலியாண மண்டபமும், வசந்த

மண்டபமும், கோயிலும் என்று அறிக!" என அருளி மறைந்தனர்.

கண் விழித்த அம்மையார், "ஆ! பெருமானே! பெருமானே!" என்று நாத்தழுதழுக்கப் பன்முறை கூறி, அங்கேயே பன்முறை விழுந்து வணங்கிப் பின் உறங்காமல் விழித்திருந்து, மறுநாள் பாராயணத்தின்போது அனைத்தையும் கூறினர். அவர்களும், "எமக்காகத் தம் தேவியாரோடும் திருவடி நோவ, திருவடி புழுதியணைய எழுந்தருளினீரோ! என்னே உம் கருணை! என்னே உம் கருணை!" எனக்கூறி, மீண்டும் குமரக் கடவுளைப் போற்றித் தொழுதனர். அனந்த சுப்பையர் அப்பிரதியை அன்று முதல் பூசையில் வைத்து, வேறு பிரதி கொண்டு பாராயணம் செய்து வருவாராயினர். இப்படியே, பெருமானது காட்சி கண்டவர் வேறு பலரும் உண்டு.

ஆக, பரிபூரண பஞ்சாமிர்த வண்ணம் நல்ல ஓசையுடன் முடிந்தவரை உரக்க ஓதப்பட வேண்டும். ஒருமுறை ஓதினால் முருகப் பெருமானுக்கு ஒருமுறை பஞ்சாமிர்த அபிஷேகம் செய்ததாகும். எத்தனை முறை ஓதினாலும் அத்தனை பலன் உண்டு. தொடங்குமுன்பு ஒவ்வொரு முறையும் பஞ்சாமிர்த வண்ணச் சிறப்பு என்ற சுவாமிகளின் (ஸ்ரீமத் குமாரசுவாமியப்) பாடல் ஒன்றையும் ஓதிய பின்னரே, வண்ணத்தை ஓத வேண்டும். சுவாமிகளைத் தியானித்து, தூய்மையான நிலையில் தெளிந்த மனத்துடன் நம்பிக்கையோடு ஓதுபவர், கட்டாயம் காரிய சித்தி பெறுவர்.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எவ்வித இன்னல் இடையூறுகளானாலும், தீராத நோய் முதலிய உபாதைகள் ஆனாலும் அவையெல்லாம் தீயினில் தூசாகி நற்பயன்

கிட்டும். இது பலரும் உணர்ந்து அநுபவித்த உண்மை. (குறிப்பாக, எலும்பு நோய்க்கு சண்முக கவசமும் பஞ்சாமிர்த வண்ணமும் நல்ல மருந்தாகிப் பயன் தரும் என்பதில் ஐயமில்லை).

சுவாமிகள் சென்னை, திருவான்மியூரில், 1929-ஆம் ஆண்டு மே மாதம் முப்பதாம் நாள் வியாழக்கிழமை காலை 7.15 மணிக்கு மகா சமாதி அடைந்தனர். அந்நாள் சுக்ல வருடம் வைகாசி மாதம் அமர பட்சம் ஷஷ்டி திதி, அவிட்டத் தாரகை நாளாகும். ஆர்வம் உள்ள அன்பர்கள் சுவாமிகளின் சமாதியை தரிசித்து வழிபட்டும் பயன் பெறலாம்.

இந்நூலில் காணப்படும் பொழிப்புரை, 1964-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட "சிறுநூல் திரட்டும் குமரவேள் பதிற்றுப்பத்து அந்தாதியும்" என்ற தா. வேங்கடாசல முதலியார் அவர்கள் வெளியிட்ட நூலில் இருந்து தொகுத்துச் சுருக்கி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர் "குமாரச்சிவம்" என்றும் வழங்கப்பட்டவர். சுவாமிகளின் சீடர்களில் ஒருவர்.

ஸ்ரீ முருகப் பெருமானின் ஒப்புதல் பெற்ற, வாக்குறுதியும் பெற்ற இப்பிரபந்தங்களை அன்பர்கள் ஓதி, இறைவனின் எல்லையற்ற அருளைப் பெறுவார்களாக!

அன்பர்களின் நலம் கருதியே இச்சிறுநூல் இலவசமாக வெளியிடப்படுகிறது.

குமர குருபரன் திருவடிக்கு வணக்கம்.

ஓம்
ஸ்ரீ குமர குருபராய நம:

பஞ்சாமிர்த வண்ணச் சிறப்பு*

பரிவாளர்க ளங்கோதொரு பஞ்சாமிர்த வண்ணம்
இரியாவென துளநச்சினி தாமென்றொரு கிழமைப்
பெரியாண்முனம் வந்தோதிய செந்திற்பெரு மானே
வரிமாமறை யிறைவாவெனை மறவேலெனை மறவேல்.

- ஸ்ரீமத் குமாரசுவாமியம்

* இதனை ஓதிய பின்னரே பஞ்சாமிர்த வண்ணம் ஓதப்பட வேண்டும்.

(இயன்றவரை ஓசை நயத்தோடு ஓதுக; உடல் தூய்மையோடும், உள்ளத் தூய்மையோடும் மனம் ஒன்றி ஓதுக; இடையிடையே நிறுத்துவதும், இடையில் மற்றவருடன் பேசுவதும் கூடாது; நம்பிக்கையோடு பிழையின்றிச் செவ்வனே ஓதிச் செவ்வேள் அருள் பெறுக !)

1. பால்

சந்தம்:

தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா

தந்தந் தந்தன தந்தானா
தந்தந் தந்தன தந்தானா
தந்தந் தந்தன தந்தானா
தந்தந் தந்தன தந்தானா

தாந்த தந்தனனா தனதாந்த தந்தனனா
தாந்த தந்தனனா தனதாந்த தந்தனனா

தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தனா
– தனதன தனதானா

பால் வண்ணம்:

இதில் சூரபதுமன் செவ்வேட் பரமனுடன் போரிடும் சமர்க்கள மகிமை, இறந்த அரக்கர் உடலை, உண்ணும் பேய்கள் வெற்றி முழக்கம் செய்தல், சூரன் மாமரமானபின் வதையுண்டது, பெருமான் தந்தைக்கு உபதேசித்தது, தகாத போகத்தால் உடல் வெம்மை காரணமாகத் தோன்றும் பிணி ஒழிக்க வேண்டுதல் ஆகியவை அடங்கும்.

1. பால்

இலங்கு நன்கலை விரிஞ்சனோடு
அனந்த னும்சத மகன்சதா
வியன்கொள் தம்பியர் களும்பொனாடு
உறைந்த புங்கவர் களும்கெடாது

என்றும் கொன்றை அணிந்தோனார்
தம்தண் டின்திர ளும்சேயாம்
என்றன் சொந்தமி னும்தீதேது
என்று அங்குஅங்கு அணிகண்டு ஓயாது

ஏந்து வன்படைவேல் வலிசேர்ந்த திண்புயமே
ஏய்ந்த கண்டகர்கால் தொடைமூஞ்சி கந்தரமோடு

எலும்புறும் தலைகளும் துணிந்திட
அடர்ந்த சண்டைகள் தொடர்ந்து பேய்
எனும் குணுங்குகள் நிணங்கள் உண்டுஅரன்
மகன்புறம் சயம்எனும் சொலே
- களமிசை எழுமாறே (1/4)

துலங்கும் அஞ்சிறை அலங்கவே
விளங்க வந்தவொர் சிகண்டியே
துணிந்து இருந்து உயர் கரங்கள் மா
வரங்கள் மிஞ்சிய இரும்பு கூர்

துன்றும் தண்டமொடு அம்பு ஈர்வாள்
கொண்டு அண்டங்களில் நின்று ஊடே
சுண்டும் புங்கம் அழிந்து ஏலாது
அஞ்சும் பண்டு அசுரன் சூதே

சூழ்ந்தெழும் பொழுதே கரம்வாங்கி ஒண்திணிவேல்
தூண்டி நின்றவனே கிளைஓங்க நின்றுளமா

துவந்து வம்பட வகிர்ந்து வென்றுஅதி
பலம்பொ ருந்திய நிரஞ்சனா
சுகம்கொ ளும்தவர் வணங்கும் இங்கிதம்
உகந்த சுந்தர அலங்க்ருதா
- அரிபிர மருமேயோ, (1/2)

அலைந்து சந்ததம் அறிந்திடாது
எழுந்த செந்தழல் உடம்பினார்
அடங்கி அங்கமும் இறைஞ்சியே
புகழ்ந்த அன்றுமெய் மொழிந்தவா

அங்கு இங்கு என்பது அறுந்தேவா
எங்கும் துன்றி நிறைந்தோனே
அண்டும் தொண்டர் வருந்தாமே
இன்பம் தந்து அருளும்தாளா

ஆம்பிதந்திடுமா மணிபூண்ட வந்தனையா
ஆண்டவன் குமரா எனைஆண்ட செம்சரணா

அலர்ந்த விந்துள அலங்க லும்கடி
செறிந்த சந்தன சுகந்தமே
அணிந்து குன்றவர் நலம் பொருந்திட
வளர்ந்த பந்தனை எனும்பெணாள்
- தனைஅணை மணவாளா (3/4)

குலுங்கு இரண்டு முகையும் கள்ஆர்
இருண்ட கொந்தள ஒழுங்கும்வேல்
குரங்கும் அம்பகம் அதும்செவாய்
அதும் சமைந்துள மடந்தைமார்

கொஞ்சும் புன்தொழிலும் காலோ
  ரும்சண்டன் செயலும் சூடே
    கொண்டு அங்கம் படரும் சீழ்நோய்
      அண்டம் தந்தம் விழும் பாழ்நோய்

கூன்செயும் பிணிகால் கரம்வீங்க அழுங்கலும்வாய்
  கூம்பு அணங்குகள்நோய் துயர்சார்ந்த புன்கணுமே

குயின்கொளும் கடல்வளைந்த விங்கெனை
  அடைந்திடும் படிஇனும் செயேல்
    குவிந்துநெஞ் சம்உள் அணைந்து நின்பதம்
      நினைந்து உயும்படி மனம்செயே
        - திருவருள் முருகோனே (1)

2. தயிர்

சந்தம்:

தனத்தன தந்தன தனத்தன தந்தன
  தனத்தன தந்தன தனத்தன தந்தன
  தா தனனா தனனா தனனா

தனந்த தந்தன தனந்த தந்தன
  தனந்த தந்தன தனந்த தந்தன
  தா தனனா தனனா தனனா
    – தனதன தனதானா

தயிர் வண்ணம்:

இது மலைமகள், அலைமகள், கலைமகள், தெய்வயானை, வள்ளியம்மையர்களது சிறப்பியல்புகளையும், சிறப்பில் சிறப்பாக ஸ்ரீவனவல்லியார் திருமண நுட்பமும் தெரிவிக்கிறது.

2. தயிர்

கடித்துணர் ஒன்றிய முகில்குழலும் குளிர்
கலைப்பிறை என்றிடு நுதல்திலகம் திகழ்
காசு(உ)மையாள் இளமா மகனே
களங்க இந்துவை முனிந்து நன்கது
கடந்து விஞ்சிய முகம் சிறந்தொளி
கால்அயிலார் விழிமா மருகா
- விரைசெறிமணிமார்பா,

கனத்து உயர் குன்றையும் இணைத்துள கும்பக
லசத்தையும் விஞ்சிய தனத்துஇசை மங்கைகொள்
காதலனான் முகனா டமுதே
கமழ்ந்த குங்கும நரந்தமுந் திமிர்
கரும்பெனும் சொலை இயம்பு குஞ்சரி
காவலனே குகனே பரனே
- அமரர்கள்தொழுபாதா, (1/4)

உடுக்கு இடையின் பணி அடுக் குடையுங் கன
உரைப்புயர் மஞ்சுறு பதக்க மொ டம்பத
வோவிய நூபுரமோ திரமே(ரு)
உயர்ந்த தண்தொடை களுங் கரங்களில்
உறும் பசுந்தொடி களுங்கும் குயங்களில்
ஊரெழில் வாரொடு நாசியிலே
- மினுமணிநகையோடே

உலப்பறி லம்பக மினுக்கிய செந்திரு
உருப்பணியும் பல தரித்தடர் பைந்தினை
யோ வலிலா வரணே செயுமா(று)
ஒழுங்குறும் புனம் இருந்து மஞ்சுலம்
உறைந்த கிஞ்சுக நறுஞ்சொல் என்றிட
வோலமதே இடுகான வர்மா
- மகளெனுமொருபெருமானாம், (1/2)

மடக்கொடி முன்றலை விருப்புடன் வந்ததி
வனத்துறை குன்றுவ ருறுப்பொடு நின்றுஇள
மானினியே கனியே இனிநீ
வருந்தும் என்றனை அணைந்து சந்ததம்
மனங்குளிர்ந்திட இணங்கி வந்தரு
ளாய்மயிலே குயிலே எழிலே
- மடவனநினதேரார்

மடிக்கொரு வந்தனம் அடிக்கொரு வந்தனம்
வளைக்கொரு வந்தனம் விழிக்கொரு வந்தனம்
வாவெனுமோர் மொழியே சொலுநீ
மணம் கிளர்ந்தநல் உடம்பு இலங்கிடு
மதங்கி யின்றுள மகிழ்ந்திடும்படி
மான்மகளே எனையாள் நிதியே
- எனுமொழிபலநூறே, ($^3/_4$)

படித்த வள்தன் கைகள் பிடித்து முனம் சொன
படிக்கு மணந்தருள் அளித்த வனந்தகிர்
பா கரனே வரனே யரனே
படர்ந்த செந்தமிழ் தினம் சொலின்பொடு
பதங்குரங்குநர்உளம் தெளிந்து அருள்
பாவகியே சிகியூர் இறையே
- திருமலிசமர்ஊரா,

பவக்கடல் என்பது கடக்கவு நின்துணை
பலித்திடவும் பிழை செறுத்திடவும்கலி
பாடவுநீ நடம் ஆடவுமே
படர்ந்து தண்தயை நிதம் செயும்படி
பணிந்த என்றனை நினைந்து வந்தருள்
பாலனனே எனையாள் சிவனே
- வளர்அயில்முருகோனே. (2)

3. நெய்

சந்தம்:

தந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் தனா தனா தனா தனா

தனதன தத்தத் தனதன தத்தத்
தனதன தத்தத் தனதன தத்தத்தா
தனதன தத்தத் தனத்தனா
தனதன தத்தத் தனத்தனா

தனதன தத்தத் தனத்தனா
தனதன தத்தத் தனத்தனா

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனனா தனனா
தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனனா
– தந்தன தனதானா

நெய் வண்ணம்:

இதில், வஞ்சனை முதலிய தீக்குணமுடையார் உறவை அறவே ஒழித்துத் தொண்டர் பதிவாழ்வை அடைவிக்கவும், சிவனார் சேவகம், சக்தி தாண்டவம், மயூரப் பெருமான் மகிமை, நடனம் முதலிய வரலாற்று நுட்பங்களும், காலன் வருமுன் கந்தபிரான் காட்சி தரவும், புரிபிழைகள் பொறுத்தருளவும் செய்முறையீடும் அமைந்து உள்ளன.

3. நெய்

வஞ்சம்சூது ஒன்றும்பேர் துன்பம் சங்கடம் அண்டும்பேர்
மங்கும்பேய் நம்பும்பேர் துஞ்சும் புன்சொல் வழங்கும்பேர்
மான் கணார் பெணார் தமாலினால்

மதியது கெட்டுத் திரிபவர் தித்திப்பு
எனமது துய்த்துச் சுழல்பவர் இச்சித்தே

மனம் உயிருட்கச் சிதைத்துமே
நுகர்தின துக்கக் குணத்தினோர்
வசையுறு துட்டச் சினத்தினோர்
மடிசொல மெத்தச் சுறுக்குளோர்

வலியேறிய கூரமுளோர் உதவார்
நடுவேது மிலார் இழிவார் களவோர்
மணமலர் அடியிணை விடுபவர் தமையிலு
நணுகிட எனைவிடு வதுசரி யிலையே
- தொண்டர்கள் பதிசேராய், ($^1/_4$)

விஞ்சுங்கார் நஞ்சந்தான் உண்டும் திங்கள் அணிந்துங்கால்
வெம்பும்போ தொண்செந்தாள் கொண்டு அஞ்ச உதைந்தும்பூ
மீன் பதா கையோன் மெய்வீ யுமா

விழியை விழித்துக் கடுகவெரித்துக்
கரியை உரித்துத் தனுமிசை சுற்றிக்கோள்

விழைவறு சுத்தச் சிறப்பினார்
பிணை மழு சத்திக் கரத்தனார்
விஜயஉடுக்கைப் பிடித்துளார்
புரமதெரிக்கச் சிரித்துளார்

விதிமா தவனார் அறியா வடிவோர்
உருபாதி பெணாய் ஒளிர்வோர் சுசிநீள்
விடைதனில் இவர்பவர் பணபணம் அணிபவர்
கனைகழல் ஒலிதர நடமிடுபவர் சேய்
- என்றுள குருநாதா (1/2)

தஞ்சம் சேர் சொந்தம் சால் அம்செம் பங்கய மஞ்சுங்கா
றந் தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் ததீ ததீ ததீ ததீ

ததி மிதி தத்தித் தரிகிட தத்தத்
திரிகிட தத்தத் தெயனநடிக்கச் சூழ்

தனிநடனக்ருத் தியத்தினாண்
மகிடனை வெட்டிச் சிதைத்துளாள்
தடமிகு முக்கட் கயத்தினாள்
சுரதனுவக்கப் பகுத்துளாள்

சமி கூவிளமோடு அறுகாரணி வாள்
ஒருகோடு உடையோன் அனையாய் வருவாள்
சதுமறைகளும் வழி படவளர்பவள் மலை
மகளென ஒருபெயருடையவள் சுதனே
- அண்டர்கள் தொழுதேவா, (3/4)

பிஞ்சஞ்சூழ் மஞ்சு ஒண் சேயும் சந்
தங்கொள் பதங்கம் கூர்
பிம்பம்போல் அங்கஞ்சாரும் கண்

கண்களி லங்கும் சீர்
ஓங்கவே உலாவுகால் விணோர்

பிரமனோ டெட்டுக் குலகிரி திக்குக்
கரியொடு துத்திப் படவரவுட் கப்பார்
பிளிற நடத்திக் களித்தவா
கிரிகெட வெக்கித் துளைத்தவா

பிரியகமெத்தத் தரித்தவா தமியெனை நச்சிச் சுளித்தவா
பிணமா முனமே அருள்வாய் அருள்வாய் துனியா வையுநீ
[கடியாய் கடியாய்
பிசியொடு பலபிழை பொறு பொறு பொறு பொறு
சததமு மறைவறு திருவடி தரவா
- என்களி முருகோனே. (3)

4. சருக்கரை

சந்தம்:

தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன

தத்தன தனதன தனத்தனா
தனந்த தத்த தனத்தனா
தத்தன தனதன தனத்தனா
தனந்த தத்தன தனத்தனா
- தனதனதனதானா

சருக்கரை வண்ணம்:

மாதம், திதி, நாள், கோள் முதலானவை அடியவர்கட்கு நலமே செய்யுமாறு அருளவும், ஆண்டவன் அருள் ஆரமுதினை, அருந்தினோர் அநுபவமும், அம்புய அம்பத நேயமாகிய திருவடி தியானச் சிறப்பும், ஆறுபடைவீட்டு அமைதியும், திருமுருகனது பெருமையும் செவ்வையாய் இதில் விளக்கப் பெறுகின்றன.

4. சருக்கரை

மாதமும் தின(ம்) வாரமும் திதி
யோகமும் பலநாள்களும் படர்
மாதிரம்திரி கோள்களும் கழல்
பேணும் அன்பர்கள்பால் நலந்தர

வற்சல மதுசெயும் அருட்கணா
சிறந்த விற்பன ரகக்கணா
மற்புய அசுரரை ஒழித்தவா
அனந்த சித்துரு எடுத்தவா

மாலயன்சுரர் கோனும் உம்பர்
எலாரும் வந்தன மே பிரிந்திடு
வானவன் சுடர் வேலவன் குரு
ஞான கந்த பிரான் எனும்படி

மத்தக மிசைமுடி தரித்தவா
குளிர்ந்த கத்திகை பரித்தவா
மட்டறு மிகல் அயில் பிடித்தவா
சிவந்த அக்கினி நுதல் கணா
-சிவகுருவெனுநாதா (1/4)

நாதவிங்கித வேதமும்பல்பு
ராணமும் கலை ஆகமங்களு(ம்)
நாதன் உன் தனி வாயில் வந்தன
வேயெனும் துணிபேயறிந்த பி

னச்சுவ திவணெது கணித்தையோ
செறிந்த ஷட்பகை கெடுத்துமே
நட்புடை அருள் அமிழ்துணிற்சதா
சிறந்த துத்தியை அளிக்குமே

நாளும் இன்புயர் தேனினும் சுவை
ஈயும் விண்தல மேவரும் சுரர்
நாடி உண்டிடு போஜனம்தனி
லேயும் விஞ்சிடு மே கரும்பொடு

நட்டமின் முப்பழும் உவர்க்குமே
விளைந்த சர்க்கரை கசக்குமே
நற்சுசி முற்றிய பயத்தொடே
கலந்த புத்தமு தினிக்குமோ
- அதையினி அருளாயோ (1/2)

பூதலந்தனி லேயும் நன்குடை
மீதலந்தனி லேயும் வண்டறு
பூமலர்ந்த வு னாத வம்பத
நேயமென்பது வே தினம்திகழ்

பொற்புறும் அழகது கொடுக்குமே
உயர்ந்த மெய்ப்பெயர் புணர்த்துமே
பொய்த்திட வினைகளை அறுக்குமே
மிகுந்த சித்திகள் பெருக்குமே

பூரணம்தரு மே நிரம்பெழி
லாத னந்தரு மேய ணிந்திடு
பூட ணந்தரு மேயி கந்தனில்
வாழ்வதும் தரு மே உடம்பொடு

பொக்கறு புகழினை அளிக்குமே
பிறந்து செத்திடல் தொலைக்குமே
புத்தியில் அறிவினை விளக்குமே
நிறைந்த முத்தியும் இசைக்குமே
- இதை நிதம் உதவாயோ (3/4)

சீதளஞ் சொரி கோதில் பங்கய
மே மலர்ந்திடு வாவி தங்கிய
சீரடர்ந்த அவிர் ஆவினன்குடி
யே ரகம் பர பூதரஞ்சிவ

சித்தரு முனிவரும் வசித்த சோ
லையும் திரைக்கடல் அடிக்கும் வாய்
செற்கணம் உலவிடு பொருப்பெலாம்
இருந்து அளித்தருள் அயில்கையா,

தேன் உறைந்திடு கான கந்தனின்
மான் இளஞ்சுதை யால் இருஞ்சரை
சேர் உடம்பு தளாட வந்தசன்
யாச சுந்தர ரூப அம்பர

சிற்பர வெளிதனி னடிக்குமா
அகண்ட தத்துவ பரத்துவா
செப்பரும் ரகசிய நிலைக்குளே
விளங்கு தற்பர திருத்துவா
- திருவளர் முருகோனே.
(4)

5. தேன்

சந்தம்:

தானதன தானான தானதன தானதன
தனதான தனதான தனதான தனதான
– தனதன தனதானா

தேன் வண்ணம்:

இறுதி வண்ணம் இது. செவ்வேட் பரமன் ஆட, செகம் முழுவதும் பூதத் தொகுதிகளும், தேவர், முனிவர்களுடன் திசைக் காவலர்களும் ஆடும் அற்புதம் கூறப்படுகிறது. அம்முறையே அடியவர்கட்கு நடனக்காட்சி வழங்குமாறும் வேண்டப்படுகிறது.

5. தேன்

சூலதர னார் ஆட ஒதிமகள் ஆட நனி
தொழுபூத கணம்ஆட அரியாட அயனோடு
தூயகலை மாதுஆட மாநளினி ஆட உயர்
சுரரோடு சுரலோகபதி ஆட எலியேறு
சூகைமுக னார் ஆட மூரிமுகன் ஆட ஒரு
தொடர்ஞாளி மிசை ஊரு மழவாட வசுவீர
சூலிபதி தான் ஆட நீலநமன் ஆட நிறை
சுசிநார இறையாட வலிசானிருதிஆட
-அரிகரமகனோடே, (1/4)

காலிலியு மேயாட வாழ்நிதியன் ஆட மிகு
கனஞால மகள்ஆட வரவேணி சசிதேவி
காம மதவேள் ஆட மாமைரதி ஆட அவிர்
கதிராட மதி ஆட மணிநாக வர சோகை
காணுமுனிவோர் ஆட மாணற மினாட இரு
கழலாட அழகாய தளையாட மணிமாசில்
கானமயில் தானாட ஞானஅயில் ஆட ஒளிர்
கரவாள மதுவாட வெறிசூல மழுஆட
- வயிரமலெறுழோடே, (1/2)

கோலஅரை ஞாண் ஆட நூல்மருமம் ஆட விரை
கொளுநீ ப வணி ஆட உடையாட வடனீடு
கோழி அயராது ஆட வாகுவணி ஆட மிளிர்
குழையாட வளையாட உபயாறு கரமேசில்
கோகநத மாராறொடு ஆறுவிழி ஆட மலர்
குழகாய இதழ்ஆட ஒளிர் ஆறு சிரமோடு
கூறு கலை நா ஆட மூரல் ஒளி ஆட அலர்
குவடேறு புயம் ஆட மிடறாட மடியாட
- அகன்முது குரமோடே, ($^3/_4$)

நாலுமறையே ஆட மேல்நுதல்கள் ஆட விய
நலியாத எழிலாட அழியாத குணமாட
நாகரிகமே மேவு வேடர்மகள் ஆட வரு
ணயவானை மகளாட முசுவான முகனாட
நாரத மகான் ஆட ஓசை முனியாட விறல்
நவவீரர் புதராட ஒரு காவடியனாட
ஞான அடியாராட மாணவர்கள் ஆட விதை
நவில் ராசன் உடனாட இது வேளை யெணிவா கொள்
- அருள் மலி முருகோனே! (5)

பஞ்சாமிர்த வண்ணம் முற்றிற்று.

குமரகுருபரன் தாள் வாழ்க.

ஓம்
ஓம் குமார குருப்யோ நம:

பஞ்சாமிர்த வண்ணப்பாடல்களின் பொழிப்புரை

1. பால்

பொழிப்புரை:

"சிறந்த கலைவல்லவனாகிய பிரமனும், திருமாலும், இந்திரனும் (எப்பொழுதும் கந்தவேளின் தம்பியர் என்று) பெருமை கொள்ளும் இலட்சத்தொன்பது வீரர்களும், தேவலோக வாழ்வினராய தேவர்களும், (அழியாது விளங்கும் கொன்றை அணிந்த சிவபிரானின்) பூதங்களும் ஆகிய எல்லாம் சிவச்சேய் ஆகிய எமது சொந்தமாகும்; ஆதலின் இனி அடியார்க்கு வருங்குறை ஏதேனும் உண்டோ?" என்று கூறிப் போர்க்களத்தில் உள்ள அணிவகுப்புக்களை எல்லாம் ஆங்காங்குச் சென்று கண்டு, வேல் ஏந்திய வேள் நிற்கிறார். அப்பொழுது அசுரர்களின் உடல் பகுதிகளும், தலைகளும் துணிந்திடப் பேய்கள் இறந்தவர் கொழுப்பை உண்டு, "சிவ குமாரனுக்கே ஜெயம்" என முழக்கமிட, போர்க்களத்தில் சண்டைகள் தொடர்ந்து மிகுதியாய் நடந்தன.

அப்போரில் அழகிய தோகை அசைந்து விளங்க (இந்திரனான) மயில்மேல் வீற்றிருந்தருளிப் போர் செய்யப் (பழமையான) சூரபன்மன் தனது உயர்ந்த கரங்களிலிருந்து வரபலம் மிக்கக் கூரிய படைகள், வலிமைமிக்க தண்டாயுதத்தோடு அம்பு, வாள், முதலியவை கொண்டு பல்வேறு அண்டங்களினிடையில்

நின்று போரிட்டான். அவனது அம்புகள் எல்லாம் பயனற்று அழிந்தன. அவன் அஞ்சி, வஞ்சனையோடு, மாயப்போருக்குப் புறப்பட்டான். அப்பொழுதே (அவன்) மாயம் அழியும்படி திருக்கையினின்று ஒளியும், வலிமையும் மிக்க வேற்படையை வேகமாகத் தூண்டி நின்றவனே! (வானுற) ஓங்கிய கிளைகளையுடைய (சூரனாகிய) மாமரம் இருகூறாகும்படிப் பிளந்து வென்ற வன்மை உடைய நிரஞ்சனனே! பேரின்பத்தையே விரும்பும் தவசியர் உம்மை வணங்கும் குறிப்பை உவந்து அருளும் அழகிய முருகப் பெருமானே!

திருமாலும், பிரமனும், திருவடி திருமுடி காணாமல் எழுந்த சிவந்த அழல் திருமேனி உடைய சிவபெருமானார், தம் அங்கமெல்லாம் அடங்கி, வணங்கித் துதித்த பொழுது (அவர்க்கு) மெய்ப்பொருளை (பிரணவப் பொருளை) மொழிந்தவனே! அங்கு, இங்கு என்று காட்டி அறிய முடியாது எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தவனே! (உன்னையே தஞ்சம்) என்று வந்தடையும் அடியவர்கள் வருந்தாவண்ணம் பேரின்பம் தந்தருளும் திருவடி உடையவனே! ஒலி (உள்ள கடல்) தந்த சிறந்த முத்து(க்களைப் பரல்களாகக்) கொண்ட அழகிய சிலம்பு உடையவனே! சிவபெருமானார் திருக்-குமாரனே! எனை அடிமை கொண்ட சிவந்த தாளனே! மணம் மிக மலர்ந்துள்ள கடம்ப மாலைகளும், நறுமணம் உள்ள சந்தனமும் அணிந்து, வேட்டுவ (குலம் முழுவதும்) நலம் பெற, (அவர்களிடையே) மகளாய் மலர்ந்த பெண்ணை (வள்ளியை) அணைக்கும் மணவாளா!

திருவருள் முருகோனே! அசைந்து குலுங்கும் இருதனங்களையும், தேன் சிந்தும் (மலர் சூடிய) இருண்ட ஒழுங்கான கூந்தலையும், (கூரிய) வேலையும் (நாணித் தலை) குனியச் செய்யும் கண்களையும், சிவந்த வாயையும் உடைய

மாதர்களைக் கொஞ்சிக் குலாவும் இழிதொழிலும் (உயிர்களின்) இறுதிக் காலத்தை அறிந்து வரும் எமனது (பயங்கரச்) செயலும், வெப்பங் கொண்டு உடலில் தோன்றும், சீழ் நோய் (கட்டி), அண்டம் (முதலிய வாதங்கள்), பல்விழும் பாழ் நோய், உடலைக் கூனாக வளைக்கும் நோய், கால் கை வீக்கம், வாய் திறக்க வொட்டாமல் மூடிவிடும் புண், கண் நோய் (பிற) துன்பந்தரும் நோய்களும் (அணுகாமலும்) செய்க; மேகம் நீரை உண்ணும் கடல் சூழ்ந்த இவ்வுலகை யான் மீண்டும் அடையும்படி செய்யற்க (செய்யாதீர்). ஒருமுகமாய் மனம் குவிந்து உள்ளே (உம்மை) அணைந்து உம் திருவடிகளை நினைந்து உய்யுமாறு அருள்க!

---

2. தயிர்

பொழிப்புரை:

மணமுள்ள பூங்கொத்துக்கள் அணிந்த மேகம் போன்ற (கருங்) கூந்தலை உடையவளாயும், குளிர்ந்த அஷ்டமிச் சந்திரன் போன்ற வளைந்த நெற்றியில் திலகம் விளங்க நிற்பவளுமான ஒளிமிக்க உமையாளது இளங்குமரனே! களங்கம் மிக்க சந்திரனையும் கோபித்து, அதனையும் வென்று, மேம்பட்ட முகத்தில் சிறந்த ஒளி வீசும் கூரிய வேல் போன்ற விழிகளையுடைய இலக்குமியின் மருமகனே! மணம் நிறைந்த மாலை அணிந்த திருமார்பனே!

அடிபருத்து, உயர்ந்த மலையையும், இரண்டாக இணைத்துள்ள கும்ப கலசங்களையும் விடப் பருமையிலும் பெருமையிலும் விஞ்சிய தன பாரங்களை உடைய இசை மங்கை (சரசுவதி)யை நாவிற் கொண்ட நான்முகன்

விரும்பும் அமுதமே! மணங்கமழும் குங்குமமும், கஸ்தூரியும் அணிந்தவளும், கரும்பென இனிக்கும் சொல்லை உடையவளுமான தேவயானை கணவனே! குகனே! பரனே! தேவர்கள் தொழும் திருவடி உடையானே!

உடுக்கை போன்ற இடையும், ஒட்டியாணமும், மடிப்பான உடையும், மாற்று உயர்ந்த தங்கத்தால் ஆன அழகிய பதக்கத்தோடு, பேரழகுள்ள திருவடிகளில் சிலம்பும், (விரலில்) மோதிரமும், (மார்பில்) குளிர்ந்த (மலர்) மாலைகளும், கைகளில் பொருந்திய பச்சை வளையல்களும், மார்பில் அழகிய கச்சும், மூக்கில் ஒளிவீசும் அணிகளும், (மற்றும்) அழிவற்ற இலம்பகம் (நெற்றி அணி) முதலிய செவ்விய அணிகலன்கள் யாவும் அணிந்து, நெருங்கி வளரும் தினையை, இடைவிடாது காவல் செய்ய ஒழுங்கான தினைப்புனத்தில் இருந்து, அழகு மிக்க, கொஞ்சு மொழியுள்ள, கிளிச் சொல் போன்ற, ஆலோலக் குரல் காட்டும் வேட்டுவ மகள் என்ற ஒரு மானாகிய,

இளமை மிக்க கொடி போன்ற வள்ளியம்மையார் முன்பாக ஒருதலைக்காதல் கொண்டவனைப் போல் வந்து, சிறந்த கானக் குறவருடைய உருவுடன் நின்று, "அழகுமிக்க மானே! கனியே! இனி நீ, வருந்தும் என்னை அணைந்து எப்போதும் மனங்குளிர வந்தருளாய்! மயிலே! குயிலே! அழகே! இள அன்னமே! உனது அழகு நிறைந்த

சேலைக்கு ஒரு வணக்கம்; திருவடிகட்கு வணக்கம்; வளைகட்கு வணக்கம்; விழிகட்கொரு வணக்கம்; "வா"வென்னும் ஒரு மொழியே நீ சொல்க. மணமிக்க நல்லுடல் உள்ள இளம்பெண்ணே! இன்று என் உள்ளம்

மகிழுமாறு, மான் மகளே! என்னுடைய செல்வமே! என்னை யாண்டு கொள்க!" என்பன போன்ற பல சொல்லி,

அவளது கைகளைப் பிடித்து (முன்பே) வாக்களித்தபடி திருமணம் செய்தருள் பாலித்த முடிவில்லாக் கருணையே! வரனே! அரனே! பரந்துள்ள செந்தமிழ்ப் பாக்களால் நிதமும் துதிக்கும் இன்பத்துடன் (உன்) திருவடிகளை வணங்கும் தொண்டர்களின் உள்ளக் குறிப்பைத் தெளிந்து அருளும் அக்நிகர்ப்பனே! (தூயவனே!) மயிலேறும் இறைவனே! தெய்வீகப் பொலிவு நிறைந்த திருப்போரூரானே!

காக்கும் கடவுளே! எனையாளும் அறுமுகச் சிவனே! மேலோங்கும் வேலேந்தும் இளம்பூரணனே! பிறவிக் கடலென்பதைக் கடப்பதற்கும், உனது துணை கிடைப்பதற்கும், (என்) பிழைகளைக் களைவதற்கும், (அடியேன்) கவிபாடவும், (நீ மகிழ்ந்து) நடனம் செய்வதற்கும் திருவுளம் பற்றிக் குளிர்ந்த அருளைச் செய்யுமாறு தினமும் பணிந்த என்னையும் ஒரு பொருளாக எண்ணி மகிழ்வுடன் அருள்வாயாக!

---

3. நெய்

பொழிப்புரை:

வஞ்சனையும் சூதும் உள்ளவர்களும், துன்பமும், துயரமும் (பிறர்க்கு) உண்டாக்கும் துர்க்குணம் உடையவர்களும், அழியும் பேய்களை நம்புகிறவர்களும்,

பிறர்க்கு வாட்டத்தை உண்டாக்கும் இழிப்புரையை வழங்குவோரும், மான் போன்ற மருண்ட பார்வையுடைய பொதுமகளிர்பால் வைத்த மயக்கத்தால் மதிகெட்டு அலைபவர்களும், இனிப்பெனக் கட்குடித்து ஆடுபவர்களும், விரும்பி (ஆடு முதலியவற்றை) மனம் நோகவும், உயிர் துடிக்கவும் கொன்று தினமும் புலால் உண்ணும் துக்க குணம் உள்ளவர்களும், பழிமிக்க துஷ்ட கோபம் உடையவர்களும், சுறுசுறுப்பாய், பொய் புகல்வோர்களும், வன்மனம் கொண்ட பொறாமையுடையோரும், உலோபிகளும், நடுநிலை இகந்தவர்களும், இழிந்தவரும், கள்வரும், மணம் மிகுந்த (நினது) மலரடிகளைத் (தொழாது) விடுவோரும், ஆகியோரை அண்டியிருக்குமாறு அடியேனை விட்டு வைப்பது சரியாகாது; ஆதலின், அடியார்கள் வாழும் பதியில் சேர்ப்பாயாக.

கருமைமிக்க விடமுண்டும், மதிசூடியும், எமனார் கோபித்து (மார்க்கண்டன்மேல்) வந்தபோது ஒளிமிக்க செம்மையான (வாமச்) சேவடியால் அவரது ஐம்பூதங்களும் அஞ்ச உதைத்தும், மலர்க்கணைகளையும், மீனக் கொடியையும் உடைய மன்மதனது உடல் (வெந்து நீராகும்படி) அழிய நெற்றிக் கண்ணைத் திறந்து விரைவில் எரித்தும், (கயாசுரனாகிய) யானையை (க் கொன்று) அதன் தோலை) உரித்து உடலில் சுற்றியும், திருவிளையாடல் செய்யும் பற்றற்ற தூய பெருமையுடையவரும், மான், மழு, சூலம் ஏந்திய கரத்தினரும், வெற்றிமிக்க உடுக்கை ஏந்தியவரும், திரிபுரம் எரிக்கச் சிரித்தவரும், அயனரி அறியா வடிவினரும், (தம் திருமேனியில்) ஒருபாதி பெண்ணாக விளங்குபவரும், தூய்மைமிக்க விடையேறும் விமலரும், படமுடைய பாம்பணியும் பரமரும், கழல் ஒலிக்க நடமாடும் நம்பருமாகிய சிவபெருமானார் "சேயே!" எனக் கூறவுள்ள குருநாதனே!

அடியார் அடைக்கலம்புக உரிமை கொள்ளும், அழகிய செந்தாமரையையும் ஒப்புமை கூற இயலாத திருவடிகள் 'தந்தந்தா' என்று நடிக்குமாறு தாளங்கள் அமைந்த, ஒப்பற்ற நடனத்தில் வல்லவளும், மகிஷாசுரனை வெட்டி மடித்தவளும், அகன்ற முக்கண்களாகும் சேல் (மீன்)களை உடையாளும், சங்கரனார் விரும்ப, அவருடலில் பாகம் கொண்டவளும், வன்னி, வில்வம், அருகு, ஆத்தி அணிபவளும், ஒற்றைக் கொம்பனான விநாயகரது அன்னையானவளும், நான் மறைகளும் வழிபட வளர்பவளும் ஆகிய மலை அரையன் - மகளாகிய பார்வதியம்மையின் குமாரனே! தேவர்கள் தொழும் தேவனே!

தோகை சூழ்ந்த அழகிய பொலிவுமிக்க சிவந்த காலும், பறவையின் (மயிலின்) கண்ணாடி போன்ற கண்களும், அதில் விளங்கும் சிறப்பு ஓங்க உலா வரும்பொழுது வானோரும், பிரமனும், எட்டுத் திக்கின் குல பர்வதங்களும், எண்டிசை யானைகளும், புள்ளியுடன் கூடிய படம் கொண்ட சேடன் என்ற பாம்பும் நடுங்கி அதிர, பூமியதிர, மயிலை நடத்திக் களி கொள்பவனே! மலை அழியுமாறு வேலால் துளைத்தவனே! கடம்பு புனை ஐயனே! (பொய் புகன்ற) என்னை எளியோனை, மறக்கருணை காட்டிக் கோபித்தவனே! எனது அன்பிற்குரிய முருகோனே! அடியேன் (மாண்டு) பிணமாய்ப் போவதன் முன்னம் அருள்வாய்! அருள்வாய்! என் துன்பம் எல்லாம் ஒழிப்பாய்! பொய் முதலிய பிழைகளைப் பொறுத்தருள்க! பொறுத்தருள்க! என்றும் அழிவற்ற திருவடிகளை அடியேனுக்கு உதவுமாறு (வந்து) தந்து அருள்க!

4. சருக்கரை

பொழிப்புரை:

மாதம், நாள், வாரம், திதி, யோகம், பல நட்சத்திரங்கள், விரிந்த விண்ணில் அசையும் கோள்கள் ஆகியவை எல்லாம், (உனது) திருவடிகளை விரும்பிப் பரவும் அன்பர்கட்கு நலமே செய்யுமாறு அன்புளம் பற்றும் அருட்குணனே! சிறந்த ஞானியரின் உள்முகத்து ஒளிர்பவனே! மற்போரில் வல்ல தோள்களையுடைய அசுரரை ஒழித்தவனே! முடிவு காண முடியாத விசுவரூபம் எடுத்தவனே! அயனரி, அமரர் காவலனாம் இந்திரன், தேவர்கள் முதலியோர் வணங்கும் வானவன், கதிர்வேலன், குருபரன், ஞானக்கந்தபிரான் என விளங்குமாறு தலையில் கிரீடம் தரித்தவனே! குளிர்ந்த மாலை தாங்கியவனே! அளவில்லாத ஒளியை உடைய வேல் ஏந்தியவனே! சிவந்த தீ உமிழும் நெற்றிக் கண்ணை உடையவனே! சிவகுரு என்னும் நாதனே!

ஒளிமயமான. வேதம், புராணம், கலைகள், ஆகமங்கள் ஆகியவற்றிற்கு நாதனே! உனது ஒப்பற்ற திருவாக்குகள் என்ற உண்மையை உணர்ந்தபின் இவ்வுலகில் மதித்து விரும்பத்தக்கது யாதுளது? மிக்க காமம் முதலிய அறுபகையை அறுத்து மேன்மையாய் விரும்பத்தக்க அருளாரமுதத்தை உண்பதானால், அது எப்பொழுதும் சிறந்த போகங்களை அளிக்குமே! தினமும், இனிக்கும் தேனைக் காட்டிலும், அது இனிய சுவை தரும்! ஒப்பிட்டால் மேலுலகில், வானவர் விரும்பி உண்டிடும் தேவாமிர்தத்தையும் விட மேம்படும் கரும்போடு, சுவை குறையாத முக்கனிகளும் கூட உவர்க்கும்; (அப்பொழுது காய்ச்சிய) சர்க்கரை(ப் பாகும்) கசக்கும்! எனில் தூய பாலுடன் கலந்த சோறும்

இனிக்குமோ? இனிக்காது. (இவற்றையெல்லாம்விட மிகமிக மேம்பட்ட) அத்தகைய சிறந்த அருளமுதை இனி அருளாயோ?

மண்ணில், மற்றும் எல்லா நலங்களும் உடைய விண்ணில் சுரும்பு மூசாத, மலர்ந்த மலர் போன்றதும், எண்ணற்கரியதும், அழகியதுமான உனது திருவடி அன்பு (தியானம்) என்பதே விளங்கும் பொலிவையும் அழகையும் கொடுக்கும்; உயர்ந்த நிலைத்த பெயரைச் சேர்க்கும்; வினைகளை அழித்தொழிக்கும்; மேலான சித்தி எல்லாம் பெருகிடச் செய்யும்! பரிபூரண நிலை தரும் அழகு நிரம்பிய ஆசனம் (உயர் பதவி) தரும்; அணிகலன்கள் தரும்; இம்மையில் வாழ்வனைத்தும் உதவும்; உடம்பொடு அழியாப் புகழை ஆக்கும்; பிறப்பு இறப்பைப் போக்கும்; அறிவு துலங்கச் செய்யும்; (அழியாத) பரமுக்தியும் கிட்டச் செய்யும்; இதனை என்றும் உதவிடாயோ?

குளிர்ச்சி மிக்க தாமரை மலர்ந்திடுங் குளங்கள் நிறைந்ததும் பெருமை மிக்கதுமான திருஆவினன் குடியிலும், திருஏரகத்திலும், திருப்பரங்குன்றத்திலும், சிவ ஞானசித்தரும், முனிவரும் வசித்த திருச்சோலை மலையிலும், கடல்அலை வீசும் திருச்சீரலைவாயிலும், மேகக் கூட்டங்கள் உலவும் குன்றுதோராடலிலும், வீற்றிருந்து அருளும் வேற்கரனே! வண்டுகள் வாழும் செழும் கானகத்தே மான் மகளாம் வள்ளியம்மைக்காக, மூப்பு கொண்டு, தளர்ந்த உடம்பு தள்ளாட வந்த, துறவி வேடம் பூண்ட அழகிய உடலினை உடையவனே! அழகிய பரமனே! தகராகாசத்தில் நடிக்கும் மாஅகண்ட தத்துவ பரத்துவனே! சொல்வதற்கரிய இரகசிய நிலைக்குள்ளே விளங்கு தற்பரனே! ஆக்கல் முதலான முத்தொழிற்கு

உரியோனே! முருகோனே! எனக்கு உன் தெய்வ அருட்செல்வத்தை வளரச் செய்தருள்வாயாக!

---

5. தேன்

பொழிப்புரை:

சூலபாணியான சிவனார் ஆட, மலைமகள் ஆட, மிகவும் பணிவுள்ள பூதகணம் ஆட, திருமாலாட, பிரமனோடு தூய கலைமகள் ஆட, சிறந்த இலக்குமியாட, உயர்ந்த தேவரோடு, இந்திரன் ஆட, ஆகுவாகனத்தில் ஏறும் ஆனைமுகனார் ஆட, இடப முக நந்திதேவர் ஆட, ஒப்பற்றதும் விடாமல் தொடர்வதுமான நாய் வாகனராகிய இளைய பைரவர் ஆட, வசுக்களும், வீர சூலியான காளியும் ஆட, அவள் தலைவனான வீரபத்திரர் ஆட, கரிய எமன் ஆட, தூய வருணன் ஆட, வன்மைமிக்க ஈசானர், நிருதியும் ஆட, அரிஹரபுத்திரனோடு,

காலில்லாத சனி பகவான் ஆட, (சிவனார் தோழன் என வாழும்) குபேரன் ஆட, கனம் மிக்க பூதேவி ஆட, கங்கை, இந்திராணி, மன்மதன் ஆட, இரதிதேவியுமாட, விளங்கும் சூரிய சந்திரர் ஆட, மணிகள் தாங்கும் பாம்பரசனான சேடனும், பேரின்பங்காணும் முனிவர்களும் ஆட, பெருமை தங்கிய தரும தேவதை ஆட, இரு வீர கண்டைகளும் அசைந்து ஒலிக்க, அழகிய சிலம்பு ஒலிக்க, நீல மணி போன்றதும், குற்றமற்றதுமான நாத தத்துவக் குறிப்புடைய மயிலாட, ஞான வேலாட, ஒளிரும் கைவாள் ஆட, அச்சம் தரும் சூலம் ஆட, மழு ஆட, வலிய கதாயுதம் ஆட,

அழகிய அரைஞாண் ஆட, நூல் அணிந்த மார்பாட, மணம் மிக்க கடப்ப மாலை ஆட, உடையாட, வெற்றிமிக்க கோழி

தளராமல் ஆட, தோள் வளை ஆட, பன்னிரு கரங்களும், குற்ற மற்ற பதினெண் தாமரை விழிகளும் அசைய, மலர்ந்த அழகிய இதழ் ஆட, விளங்கும் ஆறு சிரங்களும், கலைகளை ஓதும் நாவும் ஆட, பற்களின் ஒளிவீச, மலை போன்ற மாலைகள் அணிந்த தோள்கள் அசைய, கழுத்தாட, திருவயிறாட, அகன்ற வலிய முதுகுடன்,

நான்மறைகளாட, மேலேறிய (குனித்த) புருவங்கள் ஆட, பெருமை குன்றாத அழகு ஒளிர, அழியாத (எண்) குணங்களும் விளங்கித் தோன்ற, நாகரிகமிக்க வேடர் மகள் (வள்ளி நாயகியார்) ஆட, ஞான சக்தியான ஆனைமகள் (தெய்வயானையார்) ஆட, திருப்புகழ்ச் சந்தங்களை ஓதியருளிய ஓசைமுனி அருணகிரிநாதர் ஆட, வெற்றி மிக்க நவ வீரர்களான அறிஞர்கள் ஆட, ஒப்பற்ற காவடியானாகிய இடும்பன் ஆட, ஞான அடியார் களித்தாட, மாணவர்களும் ஆட, இவ்வண்ணத்தை அருளிய குமரகுரு தாசரும் கலந்து ஆட, இதுவே தக்க சமயம் ஆதலின், அருளே நிறைந்த அண்ணல் முருகவேளே! எளியேனையும் சிறிது திருவுளத்து எண்ணி, அருள் செய்ய எழுந்தருள்க! வந்து, (அடியேனைக்) கண்டு அருள் பாலிக்க! ஆண்டு கொள்க!

"குமரகுருதாசர் புகழ் குவலயம் எங்கணும் ஓங்குக!"

பஞ்சாமிர்த வண்ணம் முற்றிற்று.
குமரகுருபரன் திருவடி வாழ்க!
திருச்சிற்றம்பலம்.

உ

சண்முக கவசம்

குறிப்பு

கலியுகம் 4993-ஆம் ஆண்டு கர வருடம், கார்த்திகை மாதம் 8-ஆம் தேதியன்று திருவிராமேச்சுரத்திலே பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் இந்த சண்முக கவசத்தைப் பாடி அருளினார்கள்.

இதனை பக்தியோடும், நம்பிக்கையோடும், நாள் ஒன்றுக்கு ஆறு முறை படிப்பவர்கள் எத்தகைய துன்பங்களிலிருந்தும் விடுபடுவர்; முடிவில் முக்தியும் அடைவர். இரவில் வழிநடக்கும் பொழுதும், வனத்திற் செல்லும் பொழுதும், நோயால் வருந்தும் பொழுதும், யாதானுமொரு பயங்கரத் துன்பத்தில் அகப்பட்ட பொழுதும், நித்திரை செய்ய ஆரம்பிக்கும் பொழுதும், மரண காலத்திலும் இக்கவசம் படிக்கப்படுமாயின் யாதொரு துன்பமும் அணுகாது. தீமை விலகி உடனே நன்மை ஏற்படும். இது, சத்தியம் இதனால் பயன் பெற்றோர் எண்ணில் அடங்கார்.

உ

ஓம் குஹாய நம:

பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிச் செய்த

சண்முக கவசம்

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள(து) ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள்அறு தெய்வமாகி
எண்திசை போற்றநின்ற என்அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க; 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதுஅவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க; 2

இருசெவி களையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசுஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்பிர மணியன் காக்க; 3

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசுஇலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க எந்தன்
ஏசுஇலா முழங்கை தன்னை எழில்குறிஞ் சிக்கோன் காக்க; 4

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க; 5

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க, வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க, பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க; 6

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான் திமிருமுன் தொடையைக் காக்க; 7

ஏரகத் தேவன் என்தாள் இருமுழங் காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க; 8

ஐயுறு மலையன் பாதத்து அமர்பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாதபரன் அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க; 9

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருந்திடா(து) அயில்வேல் காக்க; 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணியில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர்என் மேலே ஒச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க; 11

ஔவியமுளர் ஊன் உண்போர் அசடர்பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின், சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க; 12

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டி டாமல்
சடிதியில் வடிவேல் காக்க, சானவி முளை வேல் காக்க; 13

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஒந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால், எற்குஓர் ஊறு இலாது ஐவேல் காக்க; 14

சலத்தில் உய்வன், மீன்ஏறு, தண்டுடைத் திருக்கை, மற்று
நிலத்திலும் சலத்திலும் தான் நெடிந்துயர் தரற்கே உள்ள
சூலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது, அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க; 15

ஞமலியம் பரியன் கைவேல், நவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிரு புயன் சயவேல் காக்க; 16

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்ட மாலை,
குமுறு விப்புருதி குன்மம், குடல்வலி, ஈழை, காசம்,
நிமிரொணா(து) இருத்தும் வெட்டை, நீர்ப்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க; 17

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூல வெண்முளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சத்திவடி வேல்காக்க; 18

தவனமா ரோகம், வாதம், சயித்தியம், அரோசகம், மெய்
சுவறவே செய்யும் மூலச் சூடு, இளைப்பு, உடற்று விக்கல்
அவதிசெய் பேதி, சீழ்நோய் அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க; 19

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்த(ர) ஆதி
இமைப் பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க; 20

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரீ ஓம்ஜம் ரீம்வேல் காக்க; 21

மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரிசெய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறுஎந்த இடத்தும், என்னை
நண்ணிவந்து அருள்ஆர் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க; 22

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல் முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சக்ரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவமோலி திகழைவேல் கீழ்மேல் காக்க; 23

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோன் இதலுடைக் கரவேல் காக்க; 24

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க, மேற்கில்
இகல் அயில் காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க; 25

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும் ஞான்றும் நவில்கையில் நிமிர்க்கையில் கீழ்க்
கிடக்கையில் தூங்கும் ஞான்றும் கிரிதுளைத்துள வேல்காக்க; 26

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்
வழங்கும் நல்ஊண் உண்போதும் மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம்பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும் குணத்தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க; 27

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன்எல், ஓம் சிவசாமி காக்க
தெளிநடு பிற்பகல்கால் சிவகுரு நாதன் காக்க; 28

இறகுடைக் கோழித்தோகைக்கு இறை, முன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத் தே திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோள் மாறாது காக்க காக்க; 29

இனம் எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அனுபூதி சொன்ன நாதர் கோன் காக்க, இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள் தான் காக்க வந்தே! 30

சண்முக கவசம் முற்றிற்று.

அரும்பத விளக்கம்

அஞ்ச	:	பயப்பட
அஞ்சு	:	ஐம்பூதம்
அணங்கு	:	பெண்; நோய்
அணி	:	படைவரிசை; மாலை
அண்டம்	:	அண்டவாதம்
அம்பகம்	:	கண்
அம்பர	:	அழகிய பரமனே
அரண்	:	காவல்
அரிபிரமருமேயோ	:	திருமாலும், பிரமனும்
அலங்கல்	:	மாலை
அழுங்கல்	:	நோய்
அறமின்	:	தரும தேவதை
அறு	:	இல்லாத
அனந்தன்	:	திருமால்
அனையாய்	:	தாயாய்
ஆம்பி	:	(கடல்) ஒலி
ஆர்	:	ஆர்த்தி
இங்கிதம்	:	உள்ளக் குறிப்பு
இசைமங்கை	:	சரஸ்வதி
இடையின் பணி	:	ஒட்டியாணம்
இந்து	:	சந்திரன்
இந்துளம்	:	கடம்பு
இரும்பு	:	ஆயுதம்

இலம்பகம்	:	நெற்றியணி
உங்கண்	:	நடுவிடம்
உதவார்	:	கஞ்சர், உலோபி
உலப்பு	:	அழிவு
எக்கி	:	வேல்
எறுழ்	:	தண்டம்
ஓசை	:	சந்தம்
ஓசைமுனி	:	அருணகிரியார்
ஓதிமகள்	:	மலைமகள்
ஓவியம்	:	சித்திரம், சித்திரவேலை
கடலடிக்கும் வாய்	:	திருச்சீரலைவாய்
கடி	:	மணம்; வாசனை
கணம்	:	கூட்டம்
கண்	:	இடம்; உறுப்பு
கண்டகர்	:	அசுரர்
கத்திகை	:	பூமாலை
கந்தரம்	:	கழுத்து
கயற்றினாள்	:	கயல்விழியாள்
களம்	:	போர்க்களம்
கள்	:	தேன்
கனம் உரைப்பு உயர்	:	மாற்று உயர்ந்த (பொன்)
காசு	:	ஒளி
கால்	:	(வீசும்) காற்று; எமன்
கால்இலி	:	சனி (முடவன்)
கார் விஞ்சு	:	கருமைமிக்க

காவடியான்	:	இடும்பன்
கிஞ்சுகம்	:	கிளி
கிருத்தியம்	:	செய்கை
குணுங்கு	:	பேய், பிசாசு
குயின்	:	மேகம்
குரங்கும்	:	(நாணிக்) குனியும்
குரங்குநர்	:	வணங்குவோர்
குவடு	:	மலை
கூம்பு	:	(திறவாமல்) மூடச் செய்யும்
கூரம்	:	பொறாமை
கூவிளம்	:	வில்வம்
கொந்தளம்	:	கூந்தல்
கோகநதம்	:	தாமரை
கோடு	:	கொம்பு
கோள்	:	கிரகம்
ஞாளி	:	நாய்
ஞாளி.. மழவு	:	வயிரவர்
சண்டன்	:	இயமன்
சதமகன்	:	இந்திரன்
சத்தி	:	சூலம்
சந்தம்	:	அழகு, ஓசை
சமர்	:	போர்
சமி	:	வன்னி
சரை	:	மூப்பு
சிகண்டி	:	மயில்

சித்துரு	:	ஞான வடிவம்
சிற்பரவெளி	:	சிதாகாசம்
சுசி	:	தூய்மை
சுதை	:	மகள்
சுரதன்	:	சிவன்
சுளித்தல்	:	கோபித்தல்
சூகை	:	யானை
செல்	:	மேகம்
சோலை	:	சோலைமலை
தண்டு	:	சேனை
தம்பியர்	:	நவவீரரும் இலக்கவீரரும்
தளை	:	சிலம்பு, கட்டு
தனு	:	உடல்
திரித்துவா	:	மூன்று தொழிலுக்கும்
உரியவனே		
துத்தி	:	புள்ளி; துய்ப்பன
துவம்பட	:	இரண்டாய்ப் பிளக்க
துனி	:	கோபம், துன்பம், நோய்
நச்சுவது	:	விரும்புவது
நரந்தம்	:	கஸ்தூரி
நளினி	:	மலர்மகள்
நிணம்	:	கொழுப்பு
நிரஞ்சனன்	:	களங்கம் அற்றவன்
நீபம்	:	கடம்பு
நூபுரம்	:	சிலம்பு

பணபணம்	:	படம் உள்ள பாம்பு
பதங்கம்	:	பறவை
பதாகை	:	கொடி
பதி	:	கணவர்
பந்தனை	:	மகள்
பரபூதரம்	:	திருப்பரங்குன்றம்
பாலனனே	:	வளர்ப்பவனே
பிசி	:	பொய்
பிஞ்சம்	:	பீலி; இறகு
பிணை	:	பெண் மான்
பிம்பம்	:	கண்ணாடி
பிரியகம்	:	கடம்பு
பிளிர	:	அதிர
புங்கம்	:	அம்பு
புங்கவர்	:	தேவர்
புண்கண்	:	நோய்
பொக்கு	:	அழிவு
பொருப்பு	:	குன்றுதோராடல்; மலை
மகிடன்	:	மகிஷாசுரன்
மஞ்சு	:	அழகு, மேகம்
மஞ்சுலம்	:	அழகு
மடி	:	சேலை, வயிறு
மணி	:	முத்து, பவளம்
மட்டறு	:	எல்லையில்லாத
மருமம்	:	மார்பு

மா	:	இலக்குமி
மாதவன்	:	திருமால்
மாதிரம்	:	திசை
மாமை	:	அழகு
முகை	:	தனபாரம்
முடி	:	கிரீடம்
மூரி	:	ஏறு (விடை)
மெய்	:	பிரணவப் பொருள்
வரநதி	:	கங்கை
வரவேணி	:	கங்கை
வலிசான்	:	வலிய ஈசான மூர்த்தி
வற்சலம்	:	அன்பு
வார்	:	கச்சு
விற்பனர்	:	அறிஞர், ஞானியர்
வாகு	:	தோள்
விதி	:	பிரமன்
வியன்	:	பெருமிதம்
விரிஞ்சன்	:	பிரமன்
வீரசூலி	:	வீரபத்திரை
வீரசூலிபதி	:	வீரபத்திரர்
ஷட்பகை	:	உட்பகை, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

நன்றி !

சைவ சிந்தாந்த ஞானபாநு (பாம்பன்) ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகட்கும், அவர் அமைத்தருளிய மஹா-தேஜோமண்டல சபையாருக்கும், சுவாமிகளின் சிஷ்ய பரம்பரைக்கும், திருப்புகழ் சதுரர் சே.த. இராமலிங்கம் பிள்ளை உள்ளிட்ட பெரும் புலவர்க்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

"இறைவன் என்முன் வெளிப்பட்டு நின்றருளிய உறுதியுரையும் உபகாரமும் பல. என் பாடல் அவனால் அங்கீகரிக்கப்பட்டது பிரசித்தம்."

"என்னை ஆதரித்தருள் பரம ரகசிய சக்தி, என்னை நம்பினாரை ஆதரியாது நிற்குமோ? ஐயம் வேண்டாம்!" என்றார் சுவாமிகள்.

இரண்டாம் அருணகிரி எனப் போற்றப்படும் சுவாமிகளை முன்னிட்டு, செவ்வேட் பரமனின் கருணையை இறைஞ்சி, இடர் களைந்து நலம் பெறுவோமாக.

கட்டியம்

ராஜாதிராஜ ராஜபரமேஸ்வர குமாரபகவானுக்கு ஜெய்

தேவாதிதேவ தேவபரமேஸ்வர சிவசுப்ரமண்யனுக்கு ஜெய்

ஸ்ரீவல்லிதேவ சேனாசமேத சர்வசுபலட்சணனுக்கு ஜெய்

ஞானசக்தி தரஞானப் பிரகாசசுவாமிக்கு ஜெய்

குக்குடத் வஜஹஸ்த வஜ்ரபாணிக்கு ஜெய்

மயூர வாகன மகாகிருபாநிதிக்கு ஜெய்

அருணகிரி நாத ஆனந்த பராபரனுக்கு ஜெய்

* அத்யாச்ரம சுத்தாத்வைத வைதீக
சைவ சித்தாந்த ஞானபாநு
ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகட்கு ஜெய்

* திருப்பழநி சாது ஸ்ரீலஸ்ரீ தங்கவேல் சுவாமிகட்கு ஜெய்

* திருப்போரூர் சிதம்பர சுவாமிகட்கு ஜெய்

* ஸ்ரீசுப்பிரமணிய தாசருக்கு ஜெய்

* ஸ்ரீ புலவர் பெருமானுக்கு ஜெய்

* ஸ்ரீ மஹாதேஜோ மண்டலத்தாரைக்
காத்தருளும் கட்வுட்பெருமானுக்கு ஜெய் ஓம்.

(* பிற்சேர்க்கை)